[1973 பிப்ரவரி 5.

மிளகாய் ஏற்றுமதி

** 15 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு மிளகாய் ஏற்றுமதி தற்போது செய்யப்படுகின்றதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஆம்.

திரு. என். கிட்டப்பா : எந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதனையும், அதனாலே ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு நமது அரசுக்கு வருமானம் கிடைக்கிறது என்பதனையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மிளகாய் அன்னியச் செலாவணி ஈட்டக்கூடிய ஒரு முக்கியமான வணிகப் பயிர். 1967—68-ம் ஆண்டில் 69,81,890 கிலோ அனுப்பப்பட்டிருக்கிறது அதனுடைய மதிப்பு ரூ. 2,00,38,032. 1968—69-ல் 93,36,862 கிலோ அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய மதிப்பு ரூ. 1,23,80,921. 1969-70-ல் 14,44,260 கிலோ அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய மதிப்பு ரூ. 79,26,915. 1970—71-ல் 21,80,674 கிலோ அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய மதிப்பு ரூ. 1,12,88,774.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, மிளகாய் வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற காரணத்தினால் நமக்கு உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மிளகாயின் விலை அதிகமாகி விடுகிறது. 'charity begins at home' என்று சொல்வார்கள். இங்கு கிடைக்கக்கூடிய மிளகாயின் விலை அதிகமாகி விடுகிறது. ஆகவே, உள்நாட்டில் போதிய அளவுக்கு நியாயமான விலைக்கு மிளகாய் கிடைக்கின்ற அளவுக்கு ஏற்பாடு செய்துவிட்டு, பிறகு மிகுதியை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்றுமதி, இறக்குமதி நம்மிடத்தில் இல்லை. இது அன்னியச் செலாவணி ஈட்டக்கூடிய பொருளாக இருக்கின்ற காரணத்தினால் இதை நாம் கட்டுப்படுத்துவதற்கு இப்பொழுது இயலாது.

1973 பிப்ரவரி 5]

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணி கிடைப்பதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் மற்ற நாடுகளில், சிலோன், தாய்லாந்து போன்ற நாடுகளிலெல்லாம் மிளகாய் ஏற்றுமதி செய்கின்றார்கள். அவர்களுக்கு இம்போர்ட்டு லைசென்ஸ் கிடைக்கிறது, அதனால் அந்த விலையைச் சரிக்கட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இதைப் பற்றி ஸ்பைஸஸ் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் கூட எழுதியிருக்கிறார்கள். ஆகையினால் இதை நாம் அனுப்பி கிடைக்கக் கூடிய செலாவணியை வைத்துக்கொண்டு, அதற்குரிய தொகையிலிருந்து, அதிகப்படியாக ஒன்றும் நமக்குக் கிடைத்து விடுவதில்லை, நமக்குக் கிடைத்த செலாவணியைக் கொண்டு உள்நாட்டில் இருக்கக்கூடிய மற்ற விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நான் முதலிலேயே குறிப்பிட்டேன் இது அன்னியச் செலாவணிப் பயிர் என்று. மத்திய சர்க்காரிலிருந்து இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமே தவிர, நாம் அதற்கு வேண்டிய சிபார்சுதான் செய்யலாம்.

Tourist buses to hill stations.

* 16 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state:

(a) whether it is a fact that the Tamil Nadu Tourism Development Corporation Limited is conducting tours to hill stations; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) மலை வாழ் இடங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா நிறுவனம் சுற்றுப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்யவில்லை; ஆனால் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் கோடையில் உல்லாசப் பயணிகள் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்கிறது.

(இ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு இரண்டு உல்லாசப் பயண பேருந்துகள் வாங்கி உதகையில் மூன்று சுற்றுப் பயணங்களுக்கு 1972 ஆம் ஆண்டு கோடையில் ஏற்பாடு செய்தது. அதன் விபரம்